ஸ்ரீ:

**ஸ்ரீமதே கனகவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீ வீரராகவ பரப்ரஹ்மணே நம:**
**ஸ்ரீமதே வகுளபூஷண மஹாதேஶிகாய நம:**
**ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராய நம:**
**ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:**

**ந தைவம் தேஶிகாத் பரம்    தேஶிகோக்தே: பரம் நாஸ்தி    ந பரம் தேஶிகார்ச்சனாத்**

**ஸ்ரீதேஶிகனை வாசிப்போம்    ஸ்ரீதேஶிகனையே ஶ்வாஸிப்போம்**

---

# பஞ்ச ஸம்ஸ்காரமும் ப்ரபத்த்யநுஷ்டானமும்

**(ஸ்ரீ உ.வே. வித்வான். ஒப்பிலியப்பன் கோவில். வ. ந. வேதாந்ததேஶிகாசார்யர்)**

==========================================================================================

**"அரிது அரிது மானிடராதல் அரிது" என்பது ஒரு மூதுரை. ஸ்ரீவைஷ்ணவராகப் பிறப்பது இன்னும் பெரிய பேறு என்று உணரக்கூடும். பண்டைய வேதங்கள், முனிவர், ஆழ்வார்கள், ஆசார்யரத்னங்கள் எல்லோரும் ஒரு குரலில் பேசி நமக்கு வழிகாட்டி உதவியுள்ளனர். முயன்று அறிய முடியுமானால் நமக்குக் கிடைத்துள்ள ஸொத்து, பித்ரார்ஜிதம் நம்மை கர்வப்படவைக்கக் கூடியது. இதில் இரண்டு ஆத்மீகப் பண்படுத்தல் முறைகளைப் பற்றி இப்போது கூறவேண்டும்.**

## முன்னுரை

**நாஸ்திகர், அநாத்மவாதி - இவர்கள் நமது நோக்கத்திற்குப் புறம்பானவர். ஆத்மா என்று உண்டு. பரமாத்மா நம்மைப் படைத்துக் காக்கிறான். அவன் திருவருள் நம்மைக் கைதூக்கிவிடும். நம் நெறி அமைதியானதும், பிறருக்குக் கேடு விளைவிக்காததும், நமக்கு நல்ல வாழ்வு, மகிழ்ச்சி, சுகம், இறந்தபின் நல்லுலகம் எல்லாம் தர - அறம், பொருள், இன்பம், வீடு நாலும் பெறவும் உதவுமாறும் மார்க்கம் வகுத்துக்கொள்வோம். தான்தோன்றித்தனமாக, மனம் போனபடி கண்மூடித்தனமாக எதையும் செய்யலாகாது. அ-க்ரமமாகச் செய்வதெல்லாம் அக்ரமம்! பெருமாள்**

சாஸ்த்ரங்களைக் கொடுத்திருக்கிறார். இருட்டில் அவையே வெளிச்சம் தரும். நம்மைச் சரியாக இட்டுச்செல்லும். இப்படி நினைவில் கொள்க.

இளமையில் படிக்கிறோம். ஒரு வயோநிலையில் உபநயனம் ஆகிறது. ‘காயத்ரீ’ என்ற வேதமந்த்ரம் உபதேசமாகிறது. சில கடமைகள் அவச்யமாகின்றன. மூன்று வேளை ஜபம், வேறு பல. இது ஒரு ஸம்ஸ்காரம்.

அடுத்து, ஸ்ரீவைஷ்ணவராக நம்மைப் பண்படுத்திக்கொள்ளவேண்டும். ப்ராஹ்மணர் அல்லாதவராகில் நேரே பஞ்ச ஸம்ஸ்காரத்திற்குத் தகுதி வாய்க்கிறது.

## பஞ்ச ஸம்ஸ்காரம்

“பஞ்ச ஸம்ஸ்காரம்” அல்லது “ஸமாஶ்ரயணம்” என்கிறோம். தக்க ஆசார்யனிடம் நடக்கவேண்டும். அவர் அந்தக் குடும்பத்திற்கே காலம் காலமாக ஆசார்யனாய் இருப்பது கூடிய சிறப்புடையது. (காலத்தின் கொடுமை! இது பல சமயங்களில் இயலாததாகிறது.) அவரை அண்டி உபதேசம் பெறுகிறான், பாலகன். அவர் சாஸ்த்ர அறிவு, ஆசார அனுஷ்டானம், நற்பண்புகள், தொண்டு மனப்பான்மை, கருணை உள்ளம் எல்லாம் கொண்டவர். அவர் தெளிவாக உபதேசிப்பார். அவரை அண்டிப் பக்குவநிலை பெறுவதை, “ஸமாஶ்ரயணம்” என்கிறோம். இதில் ஐந்து தனித்தனி செயல்கள் உள்ளன.

### 1. தாபம்

சக்ர - சங்க - முத்ரையிடுதல் - இளைஞன் தோள்புறத்தில் வலதுபுறம் சக்ரமும், இடதில் சங்கமும், சூடு பண்ணப்பட்ட கருவிகளால் பொறிக்கப்படும். ஒரு சிறிய ஊசி போடுவது போன்ற செய்கை. நல்லது என்றால் எதிர்க்கலாமோ! நாம் மூடரல்லரே! சக்கரத்தாழ்வான் மஹிமை யாரும் இன்று அறிவர். அவர் ரக்ஷை தருகிறார். சங்கும் அப்படியே. ப்ரணவத்தின் மஹிமையுடையது. ஒரு அற்ப மனித உடல் புனிதப்படுத்தப்-படுகிறது. இந்த முத்ரையேற்ற பின் இவன் தேவர் போல பாவனத்தன்மை பெறுகிறான். வேதம் சொல்கிறது.

த்வாரகையை விட்டுச் சிறிதுகாலம் வெளியே அகல க்ருஷ்ணன் புறப்படுகிறார். காவலாளிகளுக்கு எச்சரிக்கை:- தோள்களில் சக்ர-சங்குப்பொறி ஒற்றியவரை உள்ளே விடு. இல்லாதவரை விடாதே! (மஹாபாரதம்). அஞ்சுவது பேதைமை. ஒரு அங்கீகாரம் தரும் கார்யம்.

## 2. ஊர்த்வபுண்ட்ரம்

ஸ்ரீவைஷ்ணவன், ஊர்த்வபுண்ட்ரம் என்று அழைக்கப்படும் திருமண் தரிக்கவேணும். அதன் வடிவம் பொதுவாக எவருக்கும் தெரியும். மேல்நோக்கிப்போடும் கோடுகள். அந்த ஜீவாத்மாவை உயர்த்திவிடுவதாம்! "தன் அடியாரை இப்படித் தூக்கிவிடும் பணி செய்கிறதே" என்று இந்த அடையாளத்தை ஆதரித்துப் பெருமாளும் இட்டுக் கொள்கிறாராம்! கோவிலில் பாருங்கள்! முக்யமாக மூலவர் நெற்றியில் (விஷ்ணு பாதாக்ருதி).

இது இல்லாத நெற்றி பாழ் என்று தமிழ் மூதாட்டியே சொல்லியிருக்கிறாள். இது இல்லாமல் எந்த வைதிக அல்லது வைஷ்ணவ கர்மாவும் செய்யலாகாது. திருமண் இல்லாத நிலை அமங்கலமானது. இதை விபூதியுடன் ஒப்பிட்டுப்பார்ப்பது தப்பு. ஏன் என்றால் ஒவ்வொரு திருமண்ணும் பெருமாளுடைய ஒரு வ்யூஹமூர்த்தியாக நம் மேனியில் அமைகிறது. கேசவாதி பன்னிரண்டு மூர்த்திகள். இந்த மூர்த்திகள் எல்லா அந்தணர்களாலும் ஸந்திகர்மாவில், ஆசமன - தர்ப்பணாதிகளில் போற்றப் பெறுகிறார்கள் என்று நினைவுறுக. பன்னிரண்டு திருமண் தரிப்பது ஒன்றுதான் சரியான நெறிமுறை. அதுதான் மங்கலம். அது ஏதோ பித்ருகார்யத்திற்கு மட்டும் என்று நினைப்பது தப்பு. ஸர்வதா இயலவில்லை என்றால் நெற்றியில் மட்டும் திருமண் ஸ்ரீசூர்ணம் என்ற சேர்த்தியோடு இட்டுக்கொள்ளவேணும்.

ஒரு நல்ல நிலை:- நம் பாரத தேசத்தில், அனேகமாக நூறு சதவீதம் பெண்கள் பாழும்நெற்றியைத் தவிர்க்கிறார்கள். பொட்டு இன்னும் எளிதுதான். அதற்காக ஆணும் ஏதோ பொட்டு அல்லது விபூதி இட்டுக்கொண்டால் ஒரு லாபமும் நன்மையும் இல்லை. ஹிந்து என்று காட்டுமோ? ஆம்; அது ஒன்றுதான்.

ஒரு பையனுக்குத் திருமணம், பஞ்சஸம்ஸ்காரம் ஆனவனாகில் பன்னிரண்டு திருமண் இட்டுக்கொண்டுதான் மணமேடையில் நிற்பான். நிற்கவேணும். அதுவும் கோவிலுக்குப்போக, ஸ்வாமிகளை தரிசிக்கப்போகையில் 12 திருமண் வேணும். நீ வைஷ்ணவனாக, நம்பிக்கை உள்ளவனாக இருந்தால் இதில் அலக்ஷ்யம் காட்ட முடியாது. நீ அடிமையா? பயம் ஏன்?

திருமண் இட்டுக்கொள்ள ச்லோகரூபமான மந்திரங்கள் உண்டு. அவை ரக்ஷணம் தருபவை. அந்த முறையில் இட்டுக்கொள்ள ஆசார்யன் கற்றுக்கொடுப்பார். தமிழில் பாசுரமும் உண்டு. சொல்லலாம். இரண்டு கோடுகளை நெருக்கியிடாதே. இடைவெளி இருப்பது லக்ஷணம்.

## 3. மந்த்ர உபதேசம்

மூன்று முக்கிய மந்த்ரங்கள் உண்டு. வேதம் தந்தவை இரண்டு. க்ருஷ்ணன் கீதையில் தந்தது ஒன்று. இவற்றின் பொருள் மிகவும் ஆழ்ந்ததும், விஸ்தாரமானதும் ஆகவுள்ளது.

அதன் ஸாரம்: நாம் பெருமாள் - பிராட்டி என்ற இரட்டைக்குத்தான் சேஷபூதர். அவர்க்கே தாஸ்யம் செய்யவேணும். நாம் அவர்களையே சரணம் அடையவேணும். அவர்கள் நம்மைக் காப்பர். அவர்களுக்குக் கைங்கர்யம் என்ற ரூபத்தில்தான் நம் கடமைகள் எல்லாமே அமையும். அந்த பாவத்தில் எல்லா வைதிக கர்மாக்களையும் வைஷ்ணவப்பொலிவுடன் செய்யவேணும். உண்மையில் நமக்கு இயலாத கர்மா - ஒரு யாகம், தபஸ், கடுமையான ஆசாரச்செயல் - நம்மால் முடியவில்லை என்று வருந்தவேண்டாம். நாம் சரணமடைந்த பெருமாள் நம் இயலாமைக்கு இரங்கி நம் பாபங்களிலிருந்து மன்னித்து, மீட்டு நம்மைக் கடைத்தேற்றிவிடுவார். இது ஸாரம். விஸ்தாரமாய்க்கேட்டால் பக்கம் பக்கமாக வரையலாம்.

மூலமந்திரம் (திருவஷ்டாக்ஷரம்), த்வயம், சரமச்லோகம் மூன்றும் மிகப்புனிதம். எல்லாப் பலனையும் தரும். பஞ்சம், ஏழ்மை, வியாதி முதலிய தீமைகளை அகற்றும். தினமும் காயத்ரீ ஜபத்தோடு, ஜபம் செய்ய உரியவை.

இவையிருக்க, ஏன் புதிதுபுதிதான, பாமர உபதேச விளைவான so-called மந்திரங்கள்! நாஸ்திகர்கள் இந்த மந்திரத்ரயத்தைக் கைக்கொள்ளாது வேறு ஏதோ ஒன்றைக் கைக்கொள்வர் தப்புத்தப்பாக!

ஆழ்வார்கள் அருளிச்செயல்கள் நாலாயிரமும் இதன் விரிவாக்கம்தான். மந்த்ரம் சிறிய சொற்றொடர். நிறைய அர்த்தம். மனனம் செய்பவரை ரக்ஷித்து, க்ஷேமமே பொழியும்.

## 4. இஜ்யை

யாகம் செய்தல்:- பெருமாள் திருமூர்த்திக்கு ஆராதனம் செய்து, உணவுப் பொருள்களை அவருக்கு அமுது செய்வித்து - நிவேதனம் பண்ணி - அந்த வஸ்துவை மட்டும் சாப்பிடவேணும். கண்டகண்டதை - பெருமாளுக்கு நிவேதனம் ஆகாததை - உண்பதால் பாபத்தையே உண்கிறோம். நாஸ்திகன்தான் வயிற்றுக்கு உணவு போடுவான், இந்த ரீதியில். இந்த இஜ்யா க்ரமத்தை ஆசார்யன் சொல்லிக்கொடுப்பார். சுருக்கமாக முக்கால் மணியில் முடிக்கலாம். இப்போது செய்யவேண்டும், இத்தனை நேரம் செய்யவேண்டும் என்று கட்டுப்பாடு அவசியம் இல்லை. நம் ஸௌகர்யம்

போல, உண்மையில் நம் மனசாட்சி அனுமதிக்கிற ரீதியில், செய்யலாம். ஆனால் முறை மீறி அல்ல.

தினமும் ஆராதனம் செய்யவேண்டியது இன்றியமையாதது. உணவு சமைக்கிற பெண்டிரும் பஞ்ச ஸம்ஸ்காரம் ஆனவராக இருக்கவேண்டும். அதுதான் ஆணுக்கோ, பெண்ணுக்கோ ஒரு ஆசாரத்தகுதியை வழங்கும்.

அதனால்தான் பையன் முன்பே ஸமாச்ரயணம் ஆனவனாக இருந்தால் விவாஹம் ஆன உடனே, அடுத்த கல்யாணவைபவத்திற்கு முன்பே, ஆசார்யரிடம் சென்று மணப்பெண்ணுக்கும் பஞ்சஸம்ஸ்காரம் செய்யவேண்டும் என்பது நியதி. இது புத்திக் கூர்மை உள்ள குடும்பங்களில் நிலவிவருகிறது.

பல் துலக்கி, குளித்து, வஸ்திரம் தூயது உடுத்தி நாளைத் துவங்குகிறோம். லௌகிக சுத்தி. பன்னிரண்டு திருமண் (அல்லது ஒன்றாவது). அதன் நித்யக்கடமை. பெருமாள் ஆராதனம் இவை ஆத்மசுத்தி.

இப்படி நடந்துகொண்டால் பெருமாள் நம்மைக் கைவிடுவாரா? இதெல்லாம் விட்டு, பெருமாளிடம் முறை மீறி வேண்டுதல் செய்வது, மூடக்காரியம்தானே! நவீனம் நல்லதானால் சரி, முறையற்றது, முறை தவறியது என்னும்போது ஏன் அதர்ம ரீதியில் பகவத்க்ருபை பெற யத்னம் செய்ய முற்படுகிறார்கள்?

## 5. தாஸ்ய நாமம்

இது எளிய செயல். சீடனுக்கு “ராமாநுஜதாஸன்” என்று பெயரிட்டு இம்மனோபாவம் ஏற்படப்போதிக்கிறார் ஆசார்யர். ப்ராம்மணருக்குப் பூணூல் போடுகையில் ஒரு சர்மன் அமைந்துவிடும். மற்றையோர் கண்ட கண்ட பெயர் வைத்திருக்கப்படலாம். நல்ல பண்பாடுள்ள பெயராக நாராயணதாஸர், ராமாநுஜதாஸர் என்று பெயரிட்டு அவனுடைய மனத்திலொரு புது மனோநிலையை உண்டாக்குவது இந்த ஸம்ஸ்காரம்.

இவை ஒருவனை ஆத்மிகநெறியில் பண்படுத்திவிடுபவை, க்ஷேமம் தருபவை. ஊன்றிப்படித்து அறிந்து நல்லதை உணர்க.

## ப்ரபத்த்யநுஷ்டானம்

முற்காலத்தில் - ஐம்பது ஆண்டுகள் முன்பு கூட - சாதாரணமாக இளவயதில் பஞ்ச ஸம்ஸ்காரம் ஆகி நல்ல நெறியில் குடும்பம் நடந்துகொண்டிருக்கும். 30-40 வயது ஆகிறபோது கால அவகாசம் கிடைத்து, முக்கிய ஆத்மீகநூல்களை - “ரஹஸ்ய

நூல்கள்" என்பர் - தக்க ஆசார்யனிடம் முறைப்படிக் கற்பர். இது சென்னை போன்ற பெருநகரங்களில் இன்னும் கூடுதல் எளிதாயிருக்கும். ரஹஸ்ய நூல்கள் - முக்கியமாக ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் கற்றதன் விளைவாக ஒரு மனோமுதிர்ச்சி ஏற்படும். (மற்ற நூல்கள் பற்றி இப்போது சொல்வது வேண்டாமே!)

ப்ரபத்தி - சரணாகதி என்ற உபாயத்தை அனுஷ்டிக்க, ருசி, ஆவல், த்வரை (urge) ஏற்படும். காலக்ஷேபம் செய்யாதவரும் இப்படி முனையலாம். ஏன்? பூர்வபுண்ய பலன்.

ஆசார்யன் மூலமாகப் பெருமாள் ஸந்நிதியில் ஒரு சிறு கர்மா! ஒரு அறிவாளி தன் ஆத்மாவை, தன்னை ரக்ஷிக்கும் சுமையை, பெருமாளிடம் ஸமர்ப்பிக்கிறான். இதிஹாஸ புராணங்களில் பலபல கதைகள் உண்டு. ஆனால் இங்கு நாம் ஓர் ஆத்மிக கர்மா செய்கிறோம். இதையும் மற்றதை எல்லாவற்றையும் ஒரே தராசில் போட்டு ஒப்பிடாதீர்.

நான், என் ஆத்மா - நானேதான் சுதந்திரன் என்ற கர்வம் இல்லாமல், நான் பரமாத்மாவுக்கு அடிமை செய்ய, அவனுடைய சேஷபூதன், அவன் இட்ட வழக்கு என்று உளமார நம்பி, ஏற்று, ஆத்மஸமர்ப்பணம் செய்கிறேன்.

அத்வைதம் போன்று மற்ற, மேற்கத்திய, தத்வங்களின் பின் அறிவாளிகள் பலர் ஆத்மா பற்றி, அது ஏதோ பரப்ரம்மமே என்று கொள்கை கொள்வர். அதுபற்றிக் குழம்பவேண்டாம். இந்த ஆத்மா பரம்பொருளாகவே இருப்பதா? அது எப்படி? அது வேறு, இது வேறு. வேறானது எப்படி ஒன்று என்று கூறுவது என்று ப்ரபன்ன ஸந்தான கூடஸ்தர் நம்மாழ்வார் நம் சிந்தையைத் தட்டி எழுப்பி போதிக்கிறார். இப்படி என் ஆத்மா பரமாத்மா - ஸ்ரீமந்நாராயணனுக்கு உரியது. சேஷபூதம் என்று உணர்ச்சி பெறுவது ஒரு பெரிய மனோவிகாஸம். அது ஏற்பட்டபின் ஆத்மாவைத் திருடாமல் அவனிடம் ஸமர்ப்பிக்கிறோம். கூடவே "என் எஜமானன் நீ, என்னைக் காப்பது நீ. என்னைக் காத்திடு" என்று பரஸமர்ப்பணம் செய்கிறோம்.

இது மந்த்ரத்ரயப்பொருளை உணர்ந்தவன் விளைவாக அவசியம் நேரும். இப்படி நமக்கு ப்ரபத்தி என்கிற உபாயத்தைச் செய்துவைப்பவர் ஒரு பெரிய வேதாந்தஜ்ஞானி. இது செய்விக்க க்ரமம், நெறிமுறைகள் உள்ளன. அப்படி நடக்கும்.

இப்படி நம் ரக்ஷணச்சுமையைப் பெருமாளிடம் ஸமர்ப்பித்துவிட்டபின் நமக்கு பயமும் வேண்டாம். சுமையும் இல்லை. நிம்மதியாகப் படுத்து உறங்கலாம். நம் ஆத்ம ரக்ஷண விஷயம் பற்றிக் கவலையில்லாமல்! ப்ரபத்திக்கு ஒரு வெளிப்புறத் தகுதியும் தேவையில்லை. 'சத்தியமே பேசுக' என்ற சாமான்ய தர்மம் போல அந்தணர், அந்தியர் எல்லோருக்குமே அது பயனுறும், மறுபிறவி அறுக்கும். ஏன்?

நாம் பிறந்து இறந்து மறுபடிப் பிறந்து சுழன்றுவருகிறோம் ஏன்? நம் வினைகள், நம் பாபங்கள்! இதை நாஸ்திகனும் ஏற்கவேணும். ஏன் எனில் காரணம் - விளைவு என்பது இயல்பான விதியாயிற்றே.

இப்படிப் பெருமாளிடம் நம் ஆத்மாவை, ரக்ஷணத்தை ஒப்படைத்துவிட்டால் அவர் நம் பாபங்களை இல்லையாக்கி, மறுபிறவியறுக்கிறார். அவருக்கு முடியாதது என்ன?

ஒரு புத்திசாலி ப்ரபத்தியில் நம்பிக்கை கொள்ளாதது ஏன்? அவன் ஆத்மீக வலு அத்துணையே! தெய்வசக்தியில் நாஸ்திகன். பகவானிடம் விச்வாஸம் இல்லை. சிலர் அந்த உபாயத்தின் எளிமைத்தன்மையால் அலக்ஷ்யம் கொள்வர். "நான் எத்தனை புத்தகம் படித்துள்ளேன். எல்லாச்சமயங்கள், வேதாந்தங்கள் படித்துத்தேர்ந்தவன்! ப்ரபத்தி அறிவிலிக்கு; எனக்கு இல்லை" என்று இறுமாப்புக்கொண்டு திரிவர். பகவான் முன்பு நம் அறிவு எம்மாத்திரம்? இவர்கள் உண்மையில் நாஸ்திகர்தான் என்னலாம் போலும்!

ஒரு அறிவாளன் தன் ஸ்வரூபம் பற்றிய இத்தகைய ஜ்ஞானத்தால் ஆத்ம ஸமர்ப்பணம் செய்ய முற்படுவான். அதை மறுக்கவில்லை. ஆனால் அவனுக்கு யாராவது சொல்லித்தரவேண்டும். இந்த மாதிரிக் கடமையை நிறைவேற்றுவது எத்தனை பெரிய சாதனை என்று அவனுக்குத் தானாகப் புரியாது!

யாருமே பயன் ஒன்று இருப்பதனால்தான் ஒரு காரியம் செய்ய முற்படுவர். இது மனித இயல்பு. நாம் பாபம் செய்வதில் மிகமிகத் திறமை படைத்தவர்! ஒரு வினாடியில் நாம் மனம், வாக்கு, செயல் இம்மூன்று வகைகளிலும் செய்யவல்ல ஒரு பாபம் நமக்கு விளைந்து அதைக்கழித்துப் பாபமின்மை பெற பல பல ஜன்மங்கள் எடுக்கவேண்டியிருக்கும்! பொய், ஜீவஹிம்சை, பிறருக்கு மனம் பேச்சு உடல் மூன்றாலும் தீங்கு இழைப்பது, தெய்வ அபசாரம், அதர்மமான ஆசைகளுக்கு இடம் கொடுத்தல் இப்படியெல்லாம் நம் பாபத்தன்மை பல்திறப்பட்ட பெரிய சாதனை! நாம் பெருமை கொள்வோமே! அப்படித்தானே!

ஒவ்வொரு பாபச்செயலும் நம்மை அண்டி என்னைச்செய், என்னை முதலில் செய் என்றெல்லாம் கெஞ்சுவதுபோலக் கருதி இயங்குகிறோம். செயலின் பயனை நாம் அனுபவித்தால்தானே அது தீரும்! இது பாபம் இது தப்பு என்று அறியாமல் தானே செய்தேன்! என்று சமாதானம் சொல்லமுடியாது. ஏன் என்றால் லௌகிகச்சட்டங்கள் விஷயத்திலேயே அறியாமை ஒருவனுடைய குற்றத்தை மன்னிக்க இடம் கொடாது! தெய்வச்சட்டத்தில்? அதிலும் அப்படி! ஆகவே நாம் பெரிய பாபமூட்டை சுமக்கிறோம்.

அதன் பயனாகக் கெட்ட விளைவுகள் வருகின்றன. நோய், துக்கம், விபத்து, அன்பிற்குரியவர் இழப்பு என்று பலவகை.

பெருமாளிடம் பக்தி கொண்டு நாமஸங்கீர்த்தனம், ப்ரதக்ஷிண நமஸ்காராதிகள் செய்வதெல்லாம் பெரிய உபகாரங்கள். நாம் மறுக்கவில்லை. ஆனால் அற்ப பரிகாரம்! நீண்ட இடைவிடாத தைலதாரை போன்ற பக்தியோகம் ஒரு பேருபாயம். இதை நம்மவர் புரிந்துகொள்ளவே இயலாது. கை கூப்பியது, கோவிலுக்குப் போய்வந்தது, ஒரு அர்ச்சனை செய்தது, ஒரு கற்பூரம், சிறிது துளஸி பெருமாள் ஸந்நிதித் தட்டில் வைத்தது, இத்தகைய - கடுகளவு புண்ணியம், நாம் சேர்த்திருக்கும் பாபக்கடலை வற்றச்செய்ய முடியுமா?

பெரிய பெரிய ஞானிகளே "பக்தியோகம் மிகக் கடினம். நமக்குக் கை வராது" என்று முடிவு சொல்லுகின்றனர். நமது பாபம் எல்லாம் போக, நமக்குப் பெருமாள் க்ருபை கிடைக்க, இந்த ப்ரபத்தி உபாயம்தான் உதவும். இதை நான் சொன்னால் நம்ப மாட்டீர்கள். வேதங்கள் முதல் அத்துணை சான்றுகள், ஐதிஹ்யங்கள் உள. அபௌதிகத்துறையில், அதிருஷ்ட வஸ்துக்கள் விஷயத்தில் சாஸ்த்ரம் தானே நமக்கு வழிகாட்டி! நாஸ்திகராய் இல்லாத பக்ஷத்தில்.

ப்ரபத்திக்குப் பல பெயர்களுண்டு. சரணாகதி, ஆத்ம ஸமர்ப்பணம், ஆத்மநிக்ஷேபம், அடைக்கலம், அத்ருஷ்டார்த்தம், பரந்யாஸம், பரஸமர்ப்பணம், உபாயாநுஷ்டானம் முதலியவை.

"என்னைக்காக்கும் சுமையை நீ உன் மேலே ஏற்று என் பாபத்தை விலக்கி என்னை ரக்ஷி" என்று வேண்டுகிறோம். நாமே செய்வதிலும் நமது ஆசார்யன் செய்வது இன்னும் தரமான செய்கை. அவருக்குப் பெருமாள் கூடுதல் கருணை காட்டுவான் ஆயிற்றே!

ஒன்று ஞாபகத்தில் இருக்கவேணும். த்வயமந்த்ரம் சொல்லும் கருத்து. "நான் லக்ஷ்மீ-நாராயணன் ஆகிற திவ்யதம்பதியின் திருவடிகளில் சரணம் புகுகிறேன். இதன் பலனாக அந்த திவ்யதம்பதிகளுக்கே கைங்கர்யம் செய்யப்பெறுவேனாக!" இப்படி நடக்க நம் மறுபிறவி அறுக்கவும் நமக்கு ஸ்ரீவைகுண்டலோகம் தரவும் பெருமாள் இசைகிறான். ஆஸ்திகர் நமக்குக்கிடைக்கும் உயரிய சான்றுகளினால் இதில் நம்பிக்கை பெறுவர். நாஸ்திகர் திருந்த அந்தப்பெருமாள்தான் ஸங்கல்பிக்கவேணும்!

வாசகருக்கு ஒரு ஊக்கப்பரிசு! ஆயுளில் சீக்கிரமாகவே பரந்யாஸ உபாயம் அனுஷ்டித்துவிட்டால்? அதன்பிறகு அவனுக்குப் பாபமூட்டை இல்லை. (அப்புறம் சேர்க்கக்கூடாது, அதுவேறு) அப்போது அவனுக்கு நல்விளைவுகள்தான்! புரிவதற்காக

ஒன்று சொல்கிறேன். ஜோதிடம் பார்க்கவேண்டாம். எல்லா கிரகங்களும் அவனுக்குச் சாதகமாகத் திரும்பி சுபஸ்தானங்களில் அமைந்துவிடும். அப்புறம் கிரக பீடை ஏது? கிரக பலம் என்பது ஏது? "ராமாநுக்ரஹ பலமே பலம்" என்று கீர்த்தனங்கள் இதைத் தெளிவாக்கும்.

இதைப் புராண இதிஹாஸ ஆகமநூல்கள் தெளிவிக்கின்றன. ஆழ்வார், ஆளவந்தார், எம்பெருமானார், பல ஆசார்யர்கள் வலியுறுத்தியுள்ளனர். உண்மையில் நம் ஸம்ப்ரதாயத்தின் மிகப்பெரிய அடையாளம் இந்தத் தத்துவமே. ஆனால் இந்த உபாயத்திற்கு இலக்கணம் வகுத்து எண்ணிறந்த நூல்களைத் தமிழ் - ஸம்ஸ்க்ருதம் இரண்டிலும் அருளிச்செய்த மஹோபகாரி ஸ்வாமி தேசிகன்தான். ஆயினும் நடைமுறை எப்படியிருப்பினும் எம்பெருமானார் வழிநிற்கும் எல்லா ஆசார்யர்களும், எல்லா ஸ்ரீவைஷ்ணவரும் ஏற்கும் முக்தி-உபாயம் ப்ரபத்தி மார்க்கமே. எங்கெங்கோ பிறந்தவர் இன்று நம்பமுடியாதபடி ஊர்த்வபுண்ட்ரம், குடுமி ஏற்று உலாவுகின்றனரே? எங்ஙனம் நடந்தது? அவர்களின் பூர்வஜன்ம ஸுக்ருதம். நம்மில் பலர் இந்நெறியில் ஈடுபட்டு ஆசார்யரிடம் விரைந்து "அடியேனுக்கு ப்ரபத்தி உபாய அனுஷ்டானம் செய்விக்கவேணும்" என்று வேண்ட முற்படுகிறார்களே, ஏன்? பூர்வஜன்ம புண்ணியம் தானே! இவர்களுடன் எத்தனையோ பேர் கோவில் செல்கின்றனர், உபன்யாசம் கேட்கின்றனர், திவ்யப்ரபந்தம் ஸேவிக்கின்றனர். ஆயினும் மனம் பண்படவில்லை. என் செய்ய? பூர்வபுண்யம் இல்லை.

ப்ரபத்தி செய்துகொள்ள மஹாவிச்வாஸம், மாபெரும் நம்பிக்கை ஒன்றுதான் தேவையான தகுதி என்பேன். மற்ற மதத்தினரைப் பாருங்கள். விச்வாஸம் அவர்களிடம்தான் மலையளவு. நம்மில் பலர் பகுத்தறிவு பேசிப் பொழுதுபோக்குவர். பொறுமையாக யோசியுங்கள். வேறு யோக்யதாம்சங்களை நான் வலியுறுத்த மாட்டேன். ஏனெனில் இதொன்றிருந்தால் மற்ற எல்லாம் தாமாகவே அமைந்துவிடும். மனம், எளிதாக அனுகூல்ய ஸங்கல்ப - ப்ராதிகூல்ய வர்ஜனாதிகளில் கட்டுப்படும்.

சிலர் அஞ்சுகின்றனர், "இது ஒரு பெரிய ஆபரேஷன் போல! இறங்கினால் பெருமாள் இரங்கி இந்த வாழ்வு போதும் என்று தன்னிடம் அழைத்துக்கொண்டுவிடுவாரோ? என் கொள்ளுப்பேரன் கல்யாணம் நடக்க இருக்கிறதே!" என்ற ரீதியில்! ஒரு விஷயம்: ப்ரபத்தி ஆகின்ற க்ஷணத்திலேயே ஓர் ஆத்மா பகவானுக்கு மிகவும் ப்ரியமாகிறான். எத்தனை ப்ரியம் என்றால், அவன் பிராட்டி மஹாலக்ஷ்மியை விடவுமாம் ப்ரியம்! அப்படி ஆழ்வார் கருதுகிறார். ஆகவே அவன் நிச்சயம் அருள்புரிவான். அடுத்தது ஒன்று: நமது பாபம் முழுவதும் கழிந்தால்தான் மோக்ஷம் உடனே கிடைக்கும். ப்ரபத்திக்ஷணம் வரை நாம் எவ்வளவு பாபமூட்டை சேர்த்துவைத்திருக்கிறோம்.

ப்ராரப்தத்தில் பெருமளவு ப்ரபத்திக்ஷணத்தில் போய் ஒழிந்தது. சேஷம் கொஞ்சம் இருக்கும். அது கழிய, நமது எஞ்சிய ஆயுள், நாம் இனி செய்யப்போகும் பெரிய அபராதங்கள், அறிந்துசெய்பவை, பகவதபசாரம், பாகவதாபசாரம் போன்றவை நமக்கு, நிறைய ஆயுள், நிச்சயம் தரும்! ஆகவே சாவுக்கு அஞ்சி சரணாகதியைத் தவிர்க்காதீர். பார்க்கப்போனால் அந்த மரணபயம்தான் ப்ரபத்தி செய்துகொள்ளத்தூண்டவேணும். ஆனால் ஒரு போனஸ் உண்டே! நமது சாதாரண பாபத்துக்கு, ஒன்றுக்கு, மார்பில் வேல் கொண்டு குத்தி வாள் கொண்டு தாக்கவேண்டியிருக்கும். (ஆம். நாம் பாபகரணத்திறமை அத்தனை பெரிது!) ப்ரபன்னனாய் இருந்தால், ஒரு முள் காலில் குத்தும் அத்தனையே! இன்னும் பெரிய பாவம் செய்துவிட்டால் தண்டனை சிறிது பெரிதாகும். கண் அவியும், கால் உடையும், நமது பெண்டிர் பிள்ளை தப்பாக நடந்து, எதிர்த்துப்பேசி நாம் தலையில் அடித்துக்கொள்ள நேரிடும்!

இன்னும் முக்கிய விஷயம்: நம் பரம், ரக்ஷணச்சுமை ஸர்வநியந்தாவிடம் ஒப்படைத்தாயிற்று. அதன்பின் நம் ரக்ஷணம், ஒரு நல்ல பயன் கருதி, வியாதி குணமாக, ஒரு கடவுள் - ஒரு சாமான்ய தேவதை - ஏன்? பெருமாளிடமே! காம்ய கர்ம மூலம் கோரிக்கை விடுகிறோம்! இது தப்பு. ஏன்? நமக்கு ப்ரபத்தியின்பால், பெருமாள் பால் உள்ள நம்பிக்கை அவ்வளவுதானா? இதற்கு ஒரு கதை உதவும்.

பிரம்மாஸ்த்ரம் வைத்துக் கட்டிவைத்தபின் அதை நம்பாமல் சணல்கயிறு கொண்டு கட்ட முற்பட்டால் ப்ரஹ்மாஸ்த்ரம் நழுவித் தப்பியோடிவிடும். இதை விளக்கினால் உங்களுக்குத் தெளிவாகும். (ஸ்ரீமத் ராமாயணம் ஸுந்தரகாண்டம் 48ஆம் ஸர்க நிகழ்ச்சி) ஆஞ்ஜநேயரை இந்த்ரஜித் ப்ரம்மாஸ்த்ரம் ஏவிக் கட்டினான். கை காலை அசைக்கமுடியவில்லை. கீழே விழுந்துவிட்டார். எந்த ஒரு தேவனும் அவரை அப்படிச் செய்யமுடியாது ஆகிலும், ப்ரம்மா தன் அஸ்த்ரம் ஒரு சிறிது நேரம் கட்டிப்போடும் என்ற வரம் தந்திருந்தது நினைவுக்குவந்தது. “இதை ஏற்கிறேன். வரம் அப்படி” என்று ஸ்மரித்தார். கட்டட்டும், ராவணனிடம் கொண்டுபோவர் என்று மனோரதித்தார். சுற்றி நின்ற ராக்ஷஸப்பயல்கள் எக்களிப்புடன் அவரை விழித்து நோக்க, அவர் பெரிதாக ஒலி எழுப்பினார். ராக்ஷஸர் அவரைச் சணல் கொண்டும், மரப்பட்டைகளாலும் கட்டினர். அவர் தப்பக்கூடாது என்று. ப்ரம்மாஸ்த்ரம் அகன்றது. கயிற்றை எளிதில் அறுத்து விலக்கிவிட்டார். “அஸ்த்ரபந்த: ஸ சாந்யம் ஹி ந பந்தம் அநுவர்த்ததே” இந்த நிகழ்ச்சியை எடுத்துத்தருவது நாம் பெருமாளின் திருவடியைச் சரணம் புகுந்தபின் மோக்ஷார்த்தம் இன்னொன்றை, மற்றொரு உபாயத்தைக் கைப்பிடிக்க எண்ணலாகாது என்று எடுத்துக்காட்ட. இப்படி இன்னொன்றைக் கைக்கொள்வது நம் மஹாவிச்வாஸ

குலைவைக்காட்டுவது என்றும் சொல்லியிருக்கலாம். ஒரு நிகழ்ச்சி சொன்னால் நன்றாகப்புரியுமே!

த்ருப்தப்ரபத்தி பண்ணினபிறகு தன்னைச் சபித்துக்கொள்வது, நிர்வேதப்படுவது, சீக்கிரம் மரிக்கவேண்டும் என்றெல்லாம் உளறுதல் பகவதபசாரம். ஆத்மஹத்தி போன்றவையும் மஹாபாபம். ப்ரபன்னநிலை மிக உயர்ந்த நிலை. அதில் ஏறி அமர்ந்த பின் மூடர், பாபிகள் செய்யும் கார்யங்கள் செய்யக்கூடாது. பல கட்டுப்பாடுகள் அவச்யம். சிலர், சாப்பிட விலக்குவதை முக்கியமாக வலியுறுத்துவர். நான் ஒப்புக் கொள்கிறேன். அதைவிட முக்கியம், காம்யங்களை விலக்குவது. மோக்ஷம் ஒன்றிற்குத்தானே ப்ரபத்தி பண்ணிற்று! மற்றவற்றை - ஐஹிகங்களை அடையக் காம்யகர்மாக்களைக் கையாண்டால் என்ன? ஆயுர்விருத்தி, ஸௌமங்கல்யம், பண வரவு என்று ஒவ்வொன்றிற்கும் தனியாகக் காம்யகர்மாக்களை இயற்றுவது அவச்யம் ஆகிறதே என அறியாமையால் நினைக்கின்றனர்.

பெருமாளிடம் சரண் புகுந்தபின் நமது மொத்த ஐஹிக - ஆமுஷ்மிக நன்மைக்குப் பெருமாள் விரதம் ஏற்கிறார். குலம் தரும் பாசுரத்தில் மற்றும் தந்திடும் என்ற பகுதிக்கான வ்யாக்யானம் பாரீர். விஹிதகர்மாக்களையே பயன் நோக்காமல் கடமை என்ற நினைவில் செய்க, என்கிறோம். அப்புறம் காம்யகர்மாக்களுக்கு இடம் ஏது? சற்று சிந்தித்தால் இத்தகைய காம்யகர்மாக்களை (எந்த தேவதையைக் குறித்துச் செய்தாலும் சரி) எள்ளி நகையாடத்தகும். உண்மையா அன்றா?

திவ்யதேச கைங்கர்யம், கங்காஸ்நானம், பத்ரீயாத்ரை, ஸேது ஸேவித்தல் போன்ற எல்லாம் விஹிதம் என்றே மேற்கொள்ளப்படவேண்டியவை. பகவான் உகப்பார். அதற்காக என்று கொள்க. அதைச் செய்வதானால் கர்த்தாவுக்கு ஒரு புதிய லாபம் வர வாய்ப்பு இல்லை. ஏனெனில் பெருமாள் இவனுக்கு எல்லாவற்றையும் - தன்னையே கூட வழங்க இசைந்துள்ளாரே! சிந்திக்கவும்!

பொழுதுபோக்குக்குச் சீட்டாட்டம், சதுரங்கம், ஆடுபுலியாட்டம் இப்படிச்சில உண்டு. படகுத்துறையில் படகு வரக் காத்திருக்கும்போது ஒருவன் இப்படி ஆடினான். காசு பணம் பந்தயம் இல்லை! வெறுமனே பொழுதுபோக்கலாம். (ஸ்வாமி தந்த கதை. ஆனால் இது சூதாட்டத்தை நியாயப்படுத்துவதாகக் கருதவேண்டாம்!) அதுபோலத் தான் நம் ப்ரபத்திக்குப் பின்பான வாழ்க்கை முறை.

“ப்ரபத்தி ஏதோ ஞானிகள், ஞானாதிகர், மெத்தப்படித்தவர் போன்றவருக்கு உரியது அன்று; ஜ்ஞான-சக்த்யாதிகள் இல்லாதவருக்கே உரியது” என்று ஒரு கருத்தைப் பரப்பிவிடுவர் சிலர். ஆழ்வார்கள், நமது பூர்வாசார்யர்கள், இவர்களைவிட

ஞானாதிக்யம் பெற்றவர் யாருண் ? அந்த ஆழ்வாராதியரே ப்ரபத்தி பண்ணினவர் ஆயிற்றே! ஒரு ச்லோகம் சொல்லுகிறது:- "அஜ்ஞருக்கு இதுதான், விசேஷஞானம் பெற்றவருக்கும் இதுவே. சடக்கென பவக்கடலைத் தாண்டிவிடவேண்டும் என்று துடிப்பவருக்கும் இதுவே. ஸ்ரீவைகுண்டப்பெருவாழ்வை மீட்சியின்றிப் பெற விரும்புபவர்க்கும் இதுவே".

நகரில் இருந்து ஒதுங்கிய திவ்யதேசம் ஒன்று. யாத்ரிகர்கள் கூட்டம், கார் பஸ் எல்லாம் அதிகம். ஒரு தர்மிஷ்டர் தனியொரு ஒற்றையடிப்பாதையை வகுத்தார் - குருடர், நொண்டி போன்ற இயலாத பக்தருக்கு. ராஜபாட்டையில் நடந்துபோக இயலாத ஒரு கிழவன் அல்லது பலஹீனன் குருடர் பாதையில் நடக்கக்கூடாதா? அதனால் ப்ரபத்தி என்னவோ Exclusive ஆக ஜ்ஞான சக்தி ஹீனருக்குத்தான் என்று மதிப்பிடலாகாது. ஜ்ஞானம் மிக்கவருக்கும் இதுவே. சில மந்தமதிகள் நினைப்பர். "உடனே மரணம் ஸம்பவித்துவிடுமோ?" என்று. ப்ராரப்தமிச்சம் கொஞ்சமும் இல்லாத ஒரு அபூர்வ மனிதனுக்குத்தான் அது நேரும். "அறிந்தும், அறியாமலும் பாபம் செய்யலாகிறது. ப்ராயச்சித்தம் செய்ய இயலவில்லை. ப்ரபத்தி தோற்றுவிடுமோ?" இது அநாவச்ய பயம். ப்ரபத்தி தோற்காது. பெருமாளுக்குத் திருவுள்ளம் நோவுபடும் ரீதியில் தப்புச்செய்யாத வரையில் சிறு சிறு கஷ்டங்கள் நேரிட்டு ப்ரபத்தியின் துணையாலே வீடுபேறு கிடைத்துவிடும்.

ஜ்ஞான - பக்தி கர்மாக்களில் தேர்ந்தவர் எவரும் கூட ப்ரபன்னனின் மஹிமையில் கோடியில் ஒரு பாகத்துக்கும் ஸமமாகமாட்டார் என்று சாஸ்த்ரம்.

ஸ்வாமி இதைப் பல இடங்களில் வலியுறுத்துகிறார்.

உயர்நெறியை, கடைபிடிக்க எளிதானதை, அலக்ஷ்யம் செய்து அல்லல்படும் மாந்தருக்குத் தெளிவு ஏற்படுத்தவே இத்தனை எழுதியது. சிந்தியுங்கள், சீக்கிரமே முனையுங்கள்.

பகவானாகிய நாயகனுடன் பரிணயத்துக்கான நிச்சிதார்த்தம் ப்ரபத்தி என்னலாம், ஆத்மவிவாஹத்திற்கு! ப்ரபத்தி ஆன பிறகு மனநிறைவுடன் பெருமாளுடன் சேர வாய்க்கும் நல்ல முஹூர்த்த நாளுக்குக் காத்திருக்கிறோம் அத்தனையே!!


நன்றி:

1. ஸ்ரீந்யாஸத்ரயீ அநுபந்தம் - ஸ்ரீமத் ஆண்டவன் பௌண்டரீகபுரம் ஸ்வாமி ஆஶ்ரமம்.

2. Veda Dharma Samrakshana Sabha, Charlotte, N.C, USA – www.vdssabha.org

3. Sri Thooppulmaal Sathsampradaya Sabha, Panruti, India – www.vdstrust.org